# இளையோர் ஆசிரியர்

# நம் காலத்தில் கலைஞர்!

■ நீரை.மகேந்திரன்

முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகளில், பேச்சுகளில், அவரது ஆளுமைப் பண்புகளில் இருந்து பல கோணங்களில் பலரும் பேசி இருக்கின்றனர். அவர்கள் கவனிக்கத் தவறியது அல்லது கலைஞர் என்கிற மாமனிதரின் இயக்கவியல் பண்புகளில் ஒன்றாக நான் கவனிப்பது அவருடைய ஆசிரியர் பண்பு.

கடந்த வாரத்தில் அதைத் தொட்டிருந்தாலும், அவருக்குள் இழையோடி இருந்த இடதுசாரித் தத்துவ விசாரணை, ஞானம் ஆகியவற்றைத் தனது மாணவர்களுக்கு அவர் எடுத்துவைக்கும் பாங்கும் சுவை மிகுந்தது. இடதுசாரி சிந்தனை மரபுக்கு இளைஞர்களைத் தயார் செய்து அனுப்பும் பட்டறையோ என்கிற அளவுக்கு, அவர் எழுத்துகள் ஆச்சர்யம் தருகின்றன.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலங்களில் பேரறிஞர் அண்ணா மூத்தவராகவும், மற்றவர்கள் இளையவர்களாகவும் இருந்தபோது, அண்ணாவிடம் வெளிப்பட்ட பண்பு இளையோர்களை தம்பியாக அனுசரித்தது. கலைஞரின் தலைமைக் காலம் என்பது கிட்டத்தட்ட அவருடைய சமகாலத் தோழமைகளுடன் பயணிப்பது மட்டுமல்ல, முழு முற்றாக ஒரு புதிய தலைமுறையைக் கட்சிக்குக் கொண்டு வருவது, அரசியல் மயப்படுத்துவது என்கிற சவால்கள் இருந்தன.

## கட்சியில் உருவான ஜனநாயகம்

1950-களில் அல்லது அதற்கு முன்னர் எழுந்த அமைப்பியல் நோக்கம் அதன் தீவிரத்தன்மைகளில் இருந்து, 1980-களில் மெல்ல விடுபடத் தொடங்கும் காலத்தில், தி.மு.கழகத்துக்குப் புதிய ரத்தத்தை அவர் கொண்டு வந்தது வியப்பே.

அப்படி வீரியமாக வந்தவர்களே அரசியல் களத்தில், கொள்கைப் பிடிப்புக் கொண்ட, கழகத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் தூண்களாக நிற்பதைக் காணலாம். அதற்கு ஒரு தலைவனாகக் கட்சியை வழிநடத்துவது மட்டும் போதுமானதாக இருந்திருக்க முடியாது. ஒரு வழிகாட்டுதலுடன் நின்று கொண்டிருக்க வாய்ப்பில்லை.

தேர்தல் அரசியல் கட்சிகளில் வெளிப்படும் மேலிருந்து கீழாக அதிகாரத்தை நிலைநாட்டுதல் என்கிற மரபு தி.மு.கழகத்தில், பேரறிஞர் அண்ணா காலத்திலே உடைக்கப்பட்டது என்றாலும், கலைஞர் காலத்தில் அது மேலும் ஜனநாயகம் கொள்கிறது. கிளைக் கழகங்களில் எடுக்கப்படும் முடிவு, தலைமைக் கழகம் வரையும் எதிரொலிக்கும் வகையிலான கட்சிக் கட்டமைப்பைத் தக்க வைப்பது கலைஞரின் முன் மிகப் பெரிய சவாலாக இருந்தது. அதில்தான் அவர் வெற்றி பெற்றார்.

அதையொட்டியே தி.மு.கழகத்தில் புதிய புதிய அணிகள் உருவாகின. இளைஞர் அணி போல, ஒவ்வொரு துறை சார்ந்தும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் , அவர்களைப் பங்களிப்புச் செய்ய வைக்கும் பெரும் பணியை எடுக்கிறார். இந்தப் பண்பு இடதுசாரி அரசியல் கட்சிகளின் கூறு.

கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டதைப் போல், அவர் “பொலிவிய சாகசக்காரரை ஏகாதிபத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற வேள்வியில் ஈடுபடுகிறார்” என்று குறிப்பிடுவது அவரின் இடதுசாரி சாய்முகம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?


2007-ஆம் ஆண்டு நெல்லை மாநாடு சமயத்தில், அவர் எழுதிய கட்டுரைகளில் “இளைஞர்கள் புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகள்” என்கிற ஒரு கட்டுரையில், அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

> ‘இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட, மாநாட்டுப் பந்தலில் குழுமி இருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கரவொலி செய்யுங்கள்!’

“இந்தக் கட்டுரை வரிசையினை நான் ஒன்றும் இளைஞர்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற திடீர் அக்கறை காரணமாக எழுதவில்லை. இளைஞர்களால்தான் லட்சிய வெறியோடு எதையும் சாதிக்க முடியும் என்பதை, அவர்கள் இந்தப் பரந்த உலகில் பல்வேறு நாடுகளில், இளம் வயதில் பல சாதனைகளைப் புரிந்து இருக்கிறார்கள் என்ற சான்றுகள் என் நெஞ்சில் நிழல் படங்களாக விரிந்து கொண்டிருப்பதால்தான் அவற்றை இதுபோன்ற நேரங்களில் நினைவுபடுத்துகிறேன். நான் தரும் சரித்திர குறிப்புகள் வளரும் சமுதாயத்திற்குப் புதிய ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும்” என்கிறார். அதில்தான் அவர் தத்துவச் சிந்தனைகளை முன்வைக்கிறார்.

## நெல்சன் மண்டேலா

1990-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதி கழகத்தின் மாநாடு திருச்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொண்டர்கள் வெள்ளம் அலை கடலெனத் திரண்டு குழுமி இருக்கிறது. கலைஞர் ஒலிப்பெருக்கி முன் வந்து நிற்கிறார்.



‘‘தமிழ்ப் பெருங்குடி மக்களே.. கழக உடன்பிறப்புகளே... எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி ஒன்று” என தென்னாப்பிரிக்க நாட்டில் 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கறுப்பர் இனத் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்ட செய்தியைப் பகிர்ந்து கொள்கிறார். ‘இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட, மாநாட்டுப் பந்தலில் குழுமி இருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கரவொலி செய்யுங்கள்’ என்கிறார். அவர் ‘போதும் போதும்’ என்கிற வரை கரவொலி ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

இந்தக் குறிப்பினை வாசிக்கிறபோது, என் அறிவுக்கு எட்டிய வகையில், நான் அறிந்த மேடைகளில் பரந்துபட்ட பார்வையுடன், உலகத் தலைவர்களின் வாழ்வை ஒரு நொடியில் லட்சம் பேருக்குக் கடத்தும் ஆற்றல் கலைஞரிடம் இருப்பதாக உணர்கிறேன். பிற்பாடு நெல்சன் மண்டேலா வரலாற்றையும் அவர் விரிவாக இளைஞர்களுக்குப் பதிவு செய்கிறார்.

## சாக்ரடீஸும் பிளேட்டோவும்

அவருக்கு மிகப் பிடித்தமான தத்துவவாதிகளில் ஒருவர் சாக்ரடீஸ். அவரைக் குறித்து, இப்படிச் சுவைபட விளக்குகிறார்.

‘ஏதென்ஸ் வழங்கிய கிரேக்கத்து அறிவு கிழவர் சாக்ரட்டீஸ்’ என்கிறார். தவிர, அவர் தயாரித்த பிளேட்டோ இன்றைய அரசியல் கருத்துகள் பலவற்றிற்கு தந்தையாக இருக்கிறார்.

காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரால் தயாரித்து, லெனின்- ஸ்டாலின் போன்றோரால் புடம் போட்டு எடுக்கப்பட்ட பொதுவுடைமைத் தத்துவம், பிளேட்டோ என்னும் சிந்தனை உலைக் கூடத்தில் தயாரானதுதான்.

ஹெகல் என்னும் ஜெர்மன் நாட்டுத் தத்துவஞானி, பிளேட்டோவின் உலைக் கூடத்தைப் பயன்படுத்தித்தான் புளித்துப் போன நாசிச கருத்துகளுக்கு ஜாடை காட்டினான். அந்தக் கட்டாரியைக் கொண்டு தவறான வழியில் பயன்படுத்தித் தலை கொய்ய முற்பட்டனர் இட்லர், முசோலினி போன்ற எதேச்சதிகாரிகள்.

இதுபோன்ற நல்லவற்றிற்கும் தீயனவற்றிற்கும் மூலப்பொருள் உதவியவர் பிளேட்டோ. அந்த பிளேட்டோவை தயாரித்ததோ சாக்ரடீஸ்”.

## நம் காலத்துக்கு கலைஞர்!

இந்தக் குறிப்புகளில் நான் நெடுநேரம் நிற்கிறேன். ஒரு தத்துவத்தின் வரலாற்றுப் போக்கை, மிக எளிமையாக, ஆரம்ப வாசிப்பு அனுபவம் கொண்டவர் கூடப் புரிந்து கொள்ளும் வகையில், அவரால் இலக்கியத்துவத்துடன் எழுத முடிகிறது.

இந்தியாவில் சில கம்யூனிஸ்ட் அமைப்புகள்கூட மாசே-துங் மீது மாறுபட்ட பார்வை கொண்டிருக்கின்றன. ஆனால், கலைஞரோ மாவோவின் நெடும்பயணம் குறித்து விவரிக்கையில், ஒரு சித்திரத்தைக் கண் முன்னே கொண்டு வருகிறார்.

சீனாவின் மலைகள், ஆறுகள் அவற்றைக் கடந்து செல்லும் மாசே-துங், சூ-என்லாய் தலைமையிலான செம்படையின் பிரதானப் பிரிவு , கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மக்கள் படை, இரவு பகல் பாராமல் நடந்த ஓராண்டு நடைப் பயணம், எல்லாவற்றையும் இளைஞர்களுக்கு விளக்கும் அவர் “இது உலக வரலாற்றில் ஈடுஇணையில்லா நிகழ்ச்சி” எனப் புகழாரம் சூட்டுகிறார்.

சேகுவேராவை பற்றிக் குறிப்பிடுகையில் “தன்னைக் காவு கொடுத்துக் கொண்டாவது மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டும் என்ற வெறி அவரது கண்களில் எப்போதும் ஒளி விட்டுக்கொண்டே இருந்தது”என்கிறார்.

ஒப்பிட்டுப் பாருங்கள். இதை வாசிக்கும் இளைஞர்கள் சேகுவேராவை அவரது காலத்துடன் பொருத்திப் பார்த்து புரிந்து கொள்ள முடியும். அதேநேரத்தில், கலைஞரின் இறுதிக் காலம் வரை மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டும் என்கிற ஒரு வெறி அவரது கண்களில் இருந்துகொண்டே இருந்ததைக் காலத்தை அறிந்தவர்களாலும் , களத்தை அறிந்தவர்களாலும் உணர முடியும். அந்த ஒளிதான் இளைஞர்களின் எதிர்காலத்தை நிச்சயமிட்டுக் காட்டியது.

அவர் சொற்களிலேயே சொல்வதனில் “வால்டேர் தனது புரட்சியில் கையில் ஆயுதம் ஏந்தவில்லை, ஆயிரக்கணக்கான படை வீரர்களைக் கொண்டு சேனையை நடத்தி யுத்தம் புரியவில்லை,

**‘தலையிலே சிந்தனை...**

**கையிலே பேனா...**

**நெஞ்சிலே உறுதி!’** எனக் குறிப்பிடுவார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் எனில், நம் காலத்தில் கலைஞர்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘இளைய சூரியன்’




நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, அவரால் 1993-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இதழ் ‘இளைய சூரியன்’.

தலைவர் அவர்களை ஆசிரியராகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்தில் உருவாகி, நம் கழகத் தலைவர் நடிகராகத் தோன்றிய ‘ஒரே ரத்தம்’ திரைப்படத்தின் இயக்குநர் சொர்ணம் அவர்களை பொறுப்பாசிரியராகவும் கொண்டு, வெளிவந்தது இந்த வார இதழ்.அரசியல், திரைப்படச் செய்திகள், கதைகள், கவிதைகள் போன்றவை இடம் பெற்றிருந்தாலும், பெருமளவில் இளைஞர் அணி தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த இதழ் வந்ததாக அன்றைய இளைஞர் அணியில் இருந்த நிர்வாகிகள் தெரிவிக்கிறார்கள்.

வாரந்தோறும் நம் கழகத் தலைவர் அவர்களின் கேள்வி-பதில் தொடர் வெளிவந்திருக்கிறது. 1994-ஆம் ஆண்டு வரை அந்த இதழ் வெளிவந்துள்ளது.

## ::ப்ளாஷ்பேக்



### ஈழ ஆதரவு நிதி!



நச்சினார்க்கினியன்

1980-இல் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நிதி வசூல் செய்ய, தலைவர் கலைஞர் அழைப்பு விடுத்தார். சட்டமன்றக் கட்டடத்தில் கழக அலுவலகம் இயங்கி வந்தபோது அங்கு செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் தலைவர் கலைஞர், பேராசிரியர், சாதிக் பாட்சா, நாஞ்சில் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டந்தோறும் வசூல் செய்யப்பட்ட நிதியை, கலைஞரிடம் வழங்கினோம். என் தந்தை குமார சுப்பிரமணியம் அவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார். கலைஞருக்கும் நாஞ்சிலாருக்கும் இடையில் என் தந்தை அமர்ந்துள்ளார்.

**-சு.நச்சினார்க்கினியன்,**
**அமைப்பாளர்,**
**மாநகர இலக்கிய அணி,**
**திருநெல்வேலி.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கர்நாடக கழகம்!

**1949-ஆம் ஆண்டு, தி.மு.க.வின் தொடக்க நாட்களிலேயே பெங்களூரு, சித்தூர், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் கிளைகள் உருவாகின. இந்தக் கிளைகள் அந்தந்த மாநில அமைப்புகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் விதமாக அமைக்கப்பட்டன. கர்நாடகத்தில் தமிழர்கள் அதிகமாக இருந்ததால், தி.மு.க.வின் வேகம் அங்கே அதிகம் இருந்தது. விளைவாக, தமிழ்நாட்டுக்கு வெளியே கழகம் கர்நாடக மாநிலத்தில் வலுவாக இருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 333




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131